**செய்தி வெளியீடு** **நாள்: 02.12.2024**

***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ சார்பில் வடசென்னையிலுள்ள பல்வேறு நூலகங்களை மேம்படுத்தி, பகிர்ந்த பணியிடம் (Co-working Space) மற்றும் கல்வி மையம் அமைப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு.***

*********

***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்*** *நல்வழிகாட்டுதலின்படி இன்று (2.12.2024) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான* ***திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்*** *திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, மண்டலம்-6, வார்டு-71, பெரம்பூர், நெல் வாயில் சாலை மற்றும் வார்டு-74, ஓட்டேரி, சுப்புராயன் தெருவில் அமைந்துள்ள நூலகங்கள், எழும்பூர் சட்டமன்ற தொகுதி, மண்டலம்-6, வார்டு-77, பட்டாளம், டிமலஸ் சாலையில் அமைந்துள்ள பகுதிநேர கிளை நூலகம் மற்றும் துறைமுகம் சட்டமன்ற தொகுதி, மண்டலம்-5, வார்டு-55, ஏழுகிணறு, சண்முகம் தெருவில் அமைந்துள்ள நூலகங்களை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ சார்பில் மேம்படுத்தி, பகிர்ந்த பணியிடம் (Co-working Space) மற்றும் கல்வி மையம் அமைப்பதற்காக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், இராயபுரம் சட்டமன்ற தொகுதி, மண்டலம்-5, வார்டு-53, இராயபுரம், வடக்கு சுவர் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடத்தையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

***மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :***

***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்*** பல்வேறு வளர்ச்சி திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டதை தொடர்ந்து வட சென்னை வளர்ச்சி திட்டம் என்ற ஒன்றை தன்னுடைய சிந்தனையில் உதித்த திட்டத்தினை *2021 -23* ஆம் ஆண்டுகளில் *1,000* கோடி ரூபாயில் வடசென்னை வளர்ச்சி திட்டம் என்று அறிவிக்கப்பட்டு அந்த தொகை படிப்படியாக உயர்ந்து இந்த ஆண்டு மார்ச் மாதம் *14*-ஆம் தேதி *2,037* கோடி ரூபாய் அளவில் முதல்கட்டமாக பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

அதன் தொடர்ச்சியாக அந்தத் திட்டத்தின் மொத்த தொகை ரூ.*5,427* கோடி என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது, இன்றைக்கு அதையும் தாண்டி ரூ.*6,000* கோடி ரூபாய்க்கு மேலாக இந்த வட சென்னை வளர்ச்சி திட்டத்திற்கு **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்றது. இந்த வளர்ச்சி திட்டத்தை பொறுத்தளவில் தொடர்ந்து நம் நாட்டினுடைய **மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்** ஒருபுறம் ஆய்வை மேற்கொள்கின்றார் மறுபுறம் நம்முடைய **மாண்புமிகு தமிழக முதல்வர்** நேரடியாக களத்திற்கு வந்து வளர்ச்சி பணிகளுக்குண்டான பல்வேறு ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் வழங்கி, அதன் முன்னேற்றமாக இன்னும் ஓரிரு நாளில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் ரூபாய் *1,383* கோடி அளவில் பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார்.

அதில் முக்கியமான திட்டங்கள் என்று சொல்ல வேண்டும் என்றால் மக்களுடைய வாழ்வாதாரத்தை உறுதி செய்கின்ற அளவிற்கு தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் மூன்று இடங்களில் ஏற்கனவே இருக்கின்ற குடியிருப்புகளை இடித்து, சி.எம்.டி.ஏ சார்பில் புதிதாக இரண்டு இடங்களில் *1,476* குடியிருப்புகளை புதிதாக கட்டுவதும் என்ற ஒரு திட்டம், அதோடு வடசென்னை பகுதிக்கு தடையில்லா மின்சாரம் என்ற நோக்கோடு புதிதாக துணை மின் நிலையங்களை அமைத்தல், அதேபோல் ஏற்கனவே இருக்கின்ற கான்கிரீட் பில்லர்கள் அமைந்திருக்கின்ற டிரான்ஸ்பார்மர்களை மாற்றி ஆர்.எம்.யு எனப்படுகின்ற ரிங் மெயின் யூனிட் ஆக *310* புதிதாக மாற்றுதல். அதே நேரத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்மாற்றிகள் அமைந்திருக்கின்ற இடங்களில் அதற்கு பாதுகாப்பாக கட்டடங்களை அமைத்த பல்வேறு மக்கள் நலனுக்கு தேவையான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்கின்ற திட்டப் பணிகளை துவக்க இருக்கின்றார்.

ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு கல்விதான் முதுகெலும்பு என்பதால் தான் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** பொறுப்பேற்ற பிறகு கல்விக்கு அதிகமான நிதி ஒதுக்கீட்டை ஒவ்வொரு மானிய கோரிக்கையின் போதும் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்து கொண்டு வருகின்றார். அதற்கு ஒரு முத்தாய்ப்பாக வடசென்னை மாவட்டத்திலேயே அமைந்திருக்கின்ற *15*க்கும் மேற்பட்ட நூலகங்களை **முதல்வர் படைப்பகம்** என்ற பெயரில் அதிலே பணியாற்றுபவர்களுக்காக ஒரு தளமும், அதே நேரத்தில் வீட்டில் படிக்கின்ற சூழல் இல்லாத உயர் வகுப்பில் படிக்கின்ற மாணவச் செல்வங்களுக்கு படிப்பதற்குண்டான ஒரு சூழலை உருவாக்குவதற்கு உத்தரவிட்டிருந்தார். அந்த வகையில் வட சென்னை

உட்பட்ட பகுதிகளில் 15 இடங்களில் இராயபுரம், ஆர்.கே.நகர், பெரம்பூர், கொளத்தூர், திரு.வி.க. நகர், எழும்பூர், வில்லிவாக்கம், திருவொற்றியூர், துறைமுகம் மற்றும் மாதவரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் உள்ளடங்கிய 10 சட்டமன்ற தொகுதிகளில் இந்த நூலகங்களை மேம்படுத்துகின்ற பணியும், பழைய கட்டிடங்களாக இருந்தால் அதை இடித்து புதிதாக கட்டுகின்ற பணியையும் மேற்கொண்டு வருகின்றோம்.

அதை நேரடியாக களத்திற்கு சென்று ஆய்வு செய்ய வேண்டும் என்ற **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** உத்தரவுக்கு ஏற்ப எங்கள் துறையினுடைய செயலாளர் திருமதி. காகர்லா உஷா அவர்களும், எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் திரு.அன்சுல் மிஸ்ரா அவர்களும், சென்னை பெருநகரத்தின் மேயர் திருமதி பிரியா ராஜன் அவர்களும் இந்த தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.தாயகம் கவி அவர்களும், மண்டல குழு தலைவர் திருமதி.சரிதா அவர்களும், அவர்கள் பகுதிக்குட்பட்ட அனைத்து நூலகங்களையும் ஆய்வு செய்தோம்.

இன்று காலையிலிருந்து பெரம்பூர் பகுதியில் அமைந்திருக்கின்ற நூலகத்தையும், திரு.வி.க. நகர் தொகுதியில் மேயராக இருக்கின்ற திருமதி.பிரியா ராஜன் அவர்களின் பகுதிகளிலும், அதே போல் எண்ணூர் பகுதியில் இருக்கின்ற நூலகத்தையும், தொடர்ந்து இந்த பணிகள் மேற்கொள்ளப்படும். இதனுடைய முழுப்பலன் ஏற்கனவே இருக்கின்ற நூலகங்களை புதுப்பித்தல் என்பது மே 2025-க்குள் முடிக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. புதிதாக இடித்து கட்டப்படும் கட்டிடங்களை அடுத்த ஆண்டு டிசம்பர் 2025க்குள் கட்டி முடிப்பது என்று திட்டமிட்டு இருக்கின்றோம். குறைந்த பட்சம் இதற்கு தேவையான நிதி ஆதாரங்கள் 60-திலிருந்து 70-80 கோடி ரூபாய் என்றாலும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் தர வேண்டும் என்று **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** உத்தரவிட்டிருக்கின்றார். அதையும் நாங்கள் ஏற்கனவே சென்னை பெருநகர வளர்ச்சி குழும கூட்டத்தில் வைத்து நிறைவேற்றி இருக்கின்றோம். இந்த பணிகள் வேகம் எடுக்கின்ற பொழுது இந்த பணிகள் முழுமையாக மக்கள் பயன்பாட்டிற்கு வரும்பொழுது ஏழை எளிய மக்கள் வறுமைக்கோட்டிற்கும் பொருளாதாரத்திலும் நலிவுற்று இருக்கின்ற மக்களுக்கு பேருதவியாக இந்த திட்டம் அமையும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்** தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி அவர்கள், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐடிரிம்ஸ் திரு.மூர்த்தி அவர்கள், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி நகரமைப்பு குழுத் தலைவர் திரு.இளைய அருணா அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.ரவிச்சந்திரன் அவர்கள், மண்டலக் குழுத்தலைவர்கள், திரு.ஸ்ரீராமலு, திருமதி.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் திரு.நா.பாலமுருகன், மாநகராட்சி மண்டல அலுவலர்கள் திரு.ஏ.எஸ்.முருகன், திருமதி. பரிதா பானு, செயற்பொறியாளர் திரு.சரவணன், மாவட்ட நூலக அலுவலர் திருமதி.கவிதா, மாமன்ற உறுப்பினர்கள் திரு.சொ.வேலு, திருமதி.தமிழ்ச்செல்வி சசிகுமார், திருமதி.சுமதி, திரு.தமிழ்வேந்தன், திருமதி.பரிமளா சுரேஷ், திருமதி.வேளாங்கன்னி ஆகியோர் உடனிருந்தனர்.